11.08.2017

தினமலர்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 8,500 கன அடி நீர்வரத்து



ஒகேனக்கல்: கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட நீரின் அளவு அதிகரித்துள்ளதால் , ஒகேனக்கல் காவிரியில் , தண்ணீர் வரத்து , 8,500 கன அடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் , கனமழை பெய்து வருவதால் , கர்நாடகாவில் உள்ள அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து , தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் காலை, 10:00 மணிக்கு, வினாடிக்கு, 7,000 கன அடியாக இருந்த நீர்வரத்து , நேற்று காலை, 10:00 மணி நிலவரப்படி, 8,500 கன அடியாக அதிகரித்துள்ளது. சினி பால்ஸ் , ஐந்தருவி, ஐவர் பாணி உள்ளிட்ட அருவிகளில் , தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சுற்றுலா பயணியர் , பரிசல் பயணம் செய்தும் , அருவியில் குளித்தும் மகிழ்ந்தனர்.

மின் உற்பத்தி : மேட்டூர் அணையில் இருந்து சோழசிராமணி வரை , காவிரியின் குறுக்கே, செக்கானுார், நெருஞ்சிப்பேட்டை உட்பட, ஏழு இடங்களில், கதவணை மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. வினாடிக்கு , 3,000 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர் திறப்பு , 8ம் தேதி இரவு முதல் , 7,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

கடந்த, 2ம் தேதி பராமரிப்பு பணிக்காக, செக்கானுார் கதவணையில் தேக்கிய தண்ணீர் வெளியேற்றப்பட்டது. மீண்டும் , அங்கு தண்ணீர் தேக்கி , மின் உற்பத்தி துவங்கியுள்ளது. அணையில் இருந்து , 7,000 கன அடி நீர் திறப்பதால் , அதற்கேற்ப, ஒரு கதவணையில் சராசரியாக , 8 மெகாவாட் வீதம் , ஏழு கதவணைகளில் , 56 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் லாரி வழித்தடங்களை அகற்ற கோரிக்கை

திருச்சி: 'மேட்டூர் அணையில் திறந்து விடப்பட்டுள்ள தண்ணீர் , விரைவில் கல்லணைக்கு வந்து சேரும் வகையில் , காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் அமைக்கப்பட்டுள்ள லாரிகளுக்கான வழித்தடங்களை அகற்ற வேண்டும் ' என, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்தினர்.
திருச்சியில் உள்ள காவிரி பாசனம், ஆற்று பாதுகாப்பு கோட்ட தலைமை பொறியாளர் அலுவலகத்தை நேற்று , தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் முற்றுகையிட்டனர். 'காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் அமைக்கப்பட்ட லாரிகளின் வழித்தடங்களை அகற்ற வேண்டும்' என, கோஷமிட்டனர். பின் , கோட்ட தலைமை பொறியாளரிடம் மனு கொடுத்தனர்.

பின், அவர்கள் கூறியதாவது: மேட்டூர் அணையில் இருந்து , காவிரியில், 7,000 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. வறண்டு கிடக்கும் காவிரி , கொள்ளிடம் ஆறுகளில் , மணல் எடுக்கப்பட்ட இடங்களில் , குளங்கள் போல் தோண்டி போடப்பட்டுள்ளன.
இது தவிர , குவாரிகளுக்கு லாரிகள் சென்று வர , ஆறுகளின் குறுக்கே வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இதனால், மேட்டூரில் திறக்கப்பட்ட நீர் , திருச்சி மாவட்டம் , முக்கொம்பு மேலணை , கம்பரசம்பேட்டை தடுப்பணை மற்றும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கல்லணைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே , லாரிகளின் வழித்தடங்களை அகற்ற வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பொன்னு விளையும் பூமியடா... பாரம்பரியத்தை காக்கும்'நெல்' ஜெயராமன்**





அனைத்து பயிர் ரகங்களிலும் வீரிய ஒட்டு ரகம் நடைமுறைக்கு வந்து விட்டன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய்கறிகளில் போதுமான சத்துக்கள் இல்லை என இயற்கை முறையில் வேளாண்மை செய்யும் விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர். தமிழகத்தில் தொன்று தொட்டு பாரம்பரியமாக விளைவிக்கப்பட்ட 300க்கும் மேற்பட்ட நெல் ரகங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டன. அதற்கு பதிலாக சத்துக்கள் குறைந்த குறுகிய காலத்தில் விளைந்திடும் நெல் ரகங்களுக்கு மவுசு அதிகரித்து விட்டது. இக்குறையை தீர்க்க திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியை சேர்ந்த 'நெல்' ஜெயராமன், பாரம்பரிய நெல்லில் 30 க்கும் மேற்பட்ட ரகங்களை மீண்டும் பயிரிட்டு நெல்லுக்கு உயிர் கொடுத்து வருகிறார்.

25 வகையான நெல்: நீடாமங்கலம் வேளாண்மைத்துறை பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் கூறியதாவது: அறுபதாம் குறுவை ( 60 நாள் பயிர்), பூங்கார் (70), கருங்குறுவை (90), வெள்ளக்கார் (110), வெள்ளை சித்ரகார் ( 125), துாயமல்லி (125), குழியடி சம்பா ( 125), சிவப்பு குறுவை கார் ( 125), கல்லுருண்டை சம்பா (125), நவரா (135), வரப்பு குடைஞ்சான் (135), வெள்ளை நெல் (135), கிச்சடி சம்பா ( 135), கார் (140), தங்க சம்பா ( 140), சிவப்பு சீரக சம்பா ( 140), சொர்ண மசூரி ( 145), சம்பா மோசணம் (( 150), கண்டசாலா (150), சிட்டி கார் (( 150),

ஏரி நெல் ( 160), மாப்பிள்ளை சம்பா ( 160), காட்டு யாணம் ( 180) போன்ற 25 பாரம்பரிய நெல் ரகங்களுக்கு மீண்டும் உயிரூட்டியவர் 'நெல்' ஜெயராமன். மாப்பிள்ளை சம்பா: உதாரணமாக 'மாப்பிள்ளை சம்பா' என்ற நெல் ரகம் திருமணமான புது மாப்பிள்ளைக்கு சாப்பிட கொடுப்பர். இந்த நெல்லில் ஆண்மை விருத்திக்கான அனைத்து சத்துக்களும் பொதிந்து கிடக்கிறது என்பதால் 'மாப்பிள்ளை சம்பா ' என அழைக்கப்பட்டது.

அதுபோல் பாரம்பரிய நெல் ரகங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. தமிழகத்தில் மீண்டும் பாரம்பரிய நெல் ரகங்களை விவசாயிகள் விளைவிக்க வேண்டும் என்பதற்காக முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார் ஜெயராமன். ஆண்டு தோறும் 'நெல் விழா' நடத்தி வேளாண்மைத்துறை ஒத்துழைப்புடன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். இவ்வகை ரகங்கள் அந்தந்த பகுதி தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப இயற்கையாகவே வளரும். உரம் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளாது.பசுமை புரட்சி யால் அழிவு: பொன் விளையும் பூமியான தமிழ் மண்ணில் ஏராளமான நுண் சத்துக்கள் உள்ளன. பசுமை புரட்சிக்கு பின் பாரம்பரிய நெல் ரகங்கள் சிறுக , சிறுக அழிக்கப்பட்டு விட்டன. அவற்றிற்கு மீண்டும் உயிரூட்டியவர் ஜெயராமன். அவர் உடல் நலம் குன்றியிருப்பதால் , அவரின் மேற்பார்வையில் தொடர்ந்து பாரம்பரிய நெல் ஆராய்ச்சி தொடர்கிறது. பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்து மாவட்டம் தோறும் நடக்கும் அரசு , தனியார் விவசாய கண்காட்சியில் ஸ்டால் அமைத்து விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை ஊக்கமளித்து வருகிறது.

மண்ணை மீண்டும் வளமாக்க இயற்கை உரங்களை பெருமளவு பயன்படுத்த பழைய முறைப்படி இயற்கை விவசாயத்தை பின்பற்றினால் மட்டுமே மண்ணின் மலட்டுத்தன்மை நீங்கும் என்றார். தொடர்புக்கு 94423 20861

- கா.சுப்பிரமணியன், மதுரை.

**ஜிலுஜிலு மழை நீரில் குளுகுளு விவசாயம்**



மழை நீரை நிலத்தில் சேகரித்து செலவில்லாமல் விவசாயத்தில் சாதனை படைத்து வருகிறார் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் கிளங்காட்டூரைச் சேர்ந்த விவசாயி 'துபாய்' காந்தி. தமிழகத்தில் விவசாயம் செய்ய அதிகளவு தண்ணீர் தேவை , செலவும் அதிகரித்து வருகிறது என புலம்பும் விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறார்.காந்தி கூறியதாவது: கிளாங்காட்டூரை சுற்றிலும் கரிசல் மண் பூமி , எனவே தண்ணீர் நீண்ட நாட்களுக்கு வற்றாது. எனவே பத்து ஏக்கர் நிலத்தை சுற்றிலும் பழங்கால அரண்மனையை சுற்றி இருப்பது போல 10 அடி அகலத்தில் அகழி வெட்டினேன். எனக்கு 25 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 10 ஏக்கரில் விவசாயம் செய்கிறேன். 15 ஏக்கர் நிலத்தில் விழும் மழை நீர் வரும்படி சிறு சிறு வாய்க்கால்கள் வெட்டி அதனை அகழியுடன் இணைத்துள்ளேன். 10 ஏக்கர் விவசாய நிலத்தில் ஒரு அடி உயரம் சரிவாக வருமாறு வடிவமைத்துள்ளேன். 40 சென்ட் நிலமாக 10 ஏக்கரையும் பிரித்து 2 ஏக்கருக்கு ஒரு இடத்தில் 5க்கு5அடி அகலத்தில் சிமென்ட் தொட்டி கட்டி அதனை மழை நீர் வாய்க்கால்களுடன் பிளாஸ்டிக் பைப்புகள் மூலம் இணைத்துள்ளேன்.மழை நீர் சேகரிப்பு: சிமென்ட்தொட்டிகளில் இருந்து வாய்க்கால்களில் தண்ணீர் சென்று வயல்களில் விழுமாறு வடிவமைத்துள்ளேன். வாய்க்கால்களிலும்25 அடி துாரத்திற்கு ஒரு இடத்தில் 4க்கு4 அடி அகலத்தில் குழி வெட்டி அதில்உள்ள களிமண்ணை அகற்றிவிட்டு சவடு மண்ணும் பெருமணலும் கலந்து கொட்டி அதில் தென்னங்கன்றை நட்டுள்ளேன். வரப்புகளிலும் குறிப்பிட்ட துாரத்திற்கு இம்முறையில் கரை அமைத்துள்ளேன். இதன்மூலம் மழை காலங்களில் சவடு மணல் , பெரு மணல் கலவையில் மழை நீர் சேகரிக்கப்படுகிறது. தோராயமாக 250 லிட்டர் தண்ணீர் சேகரிக்கப்படுவதாக கணக்கிட்டுள்ளேன்.கீரைகள் சாகுபடி:

வயல்களில் குதிரைவாலி , கேழ்வரகு, தண்டு கீரை ,புளிச்ச கீரை உள்ளிட்ட கீரைவகைகளை பயிரிட்டுள்ளேன். குதிரைவாலி பயிர் இரண்டு மாதங்களில் அறுவடையாகும்; கிலோ 29 ரூபாய்க்கு வியாபாரிகள் வந்து வாங்கி கொள்கின்றனர். இரண்டு மாத விளைச்சலுக்கு பின் 48 ஆயிரம் ரூபாய்க்கு லாபம் கிடைத்தது. தண்டு கீரை, புளிச்ச கீரையைசிறு வியாபாரிகள் தேடி வந்து வாங்கிச்செல்கின்றனர். மழை நீரை சேகரித்தாலே போதிய விளைச்சல் கிடைத்து விடும். மழை நீரில்தான் சத்துக்கள் அதிகம்; அதிக மகசூல்எடுக்கலாம். எங்கள் பகுதியில் களிமண் தரை என்பதால் தண்ணீர் அதிகம் உறிஞ்சாது ; நிலங்களை சுற்றிலும் மழை நீர் சேகரிப்பு அகழி வெட்டியுள்ளதால் கால்நடைகள் விவசாய நிலங்களுக்கு வராது. கால்நடை உணவு: எந்த இடத்திலும் தண்ணீரை பாய்ச்சுவதற்கு மின்சாரத்தை பயன்படுத்தவில்லை.பண்ணை குட்டை , மழை நீர் வாய்க்கால்கள் ,குழாய்கள் மூலம் வயல்களுக்கு தண்ணீர்செல்கிறது. வாய்க்கால்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைத்துள்ளேன். குதிரைவாலி அறுவடைக்கு பின் உள்ள தட்டைகள் கறவை மாடுகளுக்கு சிறந்த உணவாகிறது. ஏழை விவசாயிகளுக்குஅரசு பண்ணை குட்டைகள் அமைத்துஅதன் மூலம் கிடைக்கும் மழைநீரை வைத்து விவசாயம் செய்யவழி வகை செய்ய வேண்டும் என்றார். தொடர்புக்கு 96290 38404.

- வி. சரவணகுமார், திருப்புவனம்

# முதுமலை வனப்பகுதியில் தொடர் மழையால் நீர்நிலைகள் நிரம்பின



முதுமலை வனப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் நீர்நிலைகள் நிரம்பின. வனப்பகுதியில் பசுமை திரும்பியதால் வனவிலங்குகள் மீண்டும் வரத்தொடங்கி உள்ளன.

மசினகுடி,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் காப்பகமானது 321 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இங்கு யானைகள் , புலிகள், சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகள் வாழ்ந்து வருகின்றன. இந்த காப்பகத்தில் கடந்த கோடை காலத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியால் வனவிலங்குகள் குடிநீர் மற்றும் பசுந்தீவனங்கள் இன்றி கடுமையாக பாதிக்கபட்டன.

குறிப்பாக குடிநீர் தேடி வனவிலங்குகள் வேறு வனப்பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து சென்றன. மான் போன்ற சில வனவிலங்குகள் முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதியிலேயே இருந்தது. இதனால் அவை வறட்சி காரணமாக இறக்கும் அவலமும் ஏற்பட்டது. மேலும், 5–க்கும் மேற்பட்ட காட்டு யானைகளும் இறந்தன.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வறட்சியால் வறண்டு

காணப்பட்ட நீர் நிலைகள் அனைத்தும் நீர் நிரம்பி உள்ளது. குறிப்பாக முதுமலையில் ஓடும் முக்கிய ஆறான மாயார் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

இதன் காரணமாக வனத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள் , சிறுகுளங்கள் உள்ளிட்ட 150 நீர் நிலைகளும் முழுவதுமாக தண்ணீர் நிரம்பி காட்சியளிக்கிறது. முக்கிய நீர் நிலைகளான ஒம்பெட்ட , கேமட் போன்றவை நிரம்பி கடல்போல் காட்சி அளிக்கிறது. இதனால் வனவிலங்குகளுக்கு தண்ணீர் தட்டுப்பாடு நீங்கி உள்ளது.

மேலும் வனப்பகுதியும் பசுமையாக காட்சி அளிப்பதால் வனவிலங்குகளுக்கு தேவையான பசுந்தீவனங்களும் அதிகரித்து உள்ளன. இதனால் வறட்சி காலத்தில் வேறு வனப்பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்ற வனவிலங்குகள் மீண்டும் முதுமலை வனப்பகுதிக்கு வரத்தொடங்கி உள்ளன. இதனால் வனத்துறையினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினமணி

**பாலாற்றில் திடீர் வெள்ளம்: பொதுமக்கள் மகிழ்ச்சி**



வாணியம்பாடி அருகே அம்பலூர் பாலாற்று தரைப்பாலம் அருகே பெருக்கெடுத்து ஓடிய வெள்ளநீர்.

வாணியம்பாடி அருகே பாலாற்றில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பாலாற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாத நிலையிலும், ஆந்திர அரசு தனது மாநிலப் பகுதியில் பாலாற்றின் குறுக்கே 15-க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் கட்டியதாலும் , வேலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது.

மேலும், தமிழக-ஆந்திர எல்லையில் புல்லூர் பகுதியில் ஆந்திர அரசு 15 அடி உயரத்துக்கு தடுப்பணையைக் கட்டியுள்ளதால் நீர்வரத்து முற்றிலும் தடைபட்டது. இந்நிலையில், வாணியம்பாடி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 2 வாரங்களாக தொடர்ந்து மழை பெய்தது.

இதனால் ஏரிகள் , குளங்கள் உள்ளிட்ட நீர்நி ப்லைகளில் ஓரளவு நிறைந்தன. இந்நிலையில், கடந்த வாரம் புல்லூர் தடுப்பணை நிரம்பி பாலாற்றில் நீர் வழிந்தோட தொடங்கியது. மேலும், கடந்த 3 நாள்களாக இரவு நேரங்களில் பெய்த கனமழையின் காரணமாக வியாழக்கிழமை அதிகாலை பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளம் புல்லூர் , திம்மாம்பேட்டை, ஆவாரங்குப்பம் , அம்பலூர், கொடையாஞ்சி உள்ளிட்ட பகுதிகளைக் கடந்து தற்போது பழைய வாணியம்பாடி பகுதிக்கு வந்தடைந்துள்ளது. 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பாலாற்றில் தற்போது தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 8,500 கன அடியாக அதிகரிப்பு**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வியாழக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 8,500 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி ஆற்று நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தற்போது மழை பெய்து வருவதால், ,அங்குள்ள நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கடந்த சில நாள்களாக கர்நாடகத்தில் உள்ள கபினி , கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து தமிழகத்துக்கு காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் கடந்த சில நாள்களாக ஒகேனக்கல் அருவிகளில் வந்து கொண்டிருக்கிறது. இதில் , புதன்கிழமை வரை ஒகேனக்கல் அருவிக்கு நொடிக்கு 6,500 கன அடி நீர் வந்து

கொண்டிருந்தது. இந்த நிலையில், கர்நாடகத்தில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணத்தால் , தற்போது காவிரி ஆற்றில் வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக , வியாழக்கிழமை ஒகேனக்கல் அருவிக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 8,500 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் , ஒகேனக்கல் பிரதான அருவி, சினி அருவி , ஐவர் பாணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.